வாராந்த மின்னிதழ்

# கருப்பு வெள்ளை Black & white

மறைக்கப்பட்ட உண்மைகளின் உரிமைக் குரல்..!

கருப்பு : 01 | 2021 ஜூலை - 08 | வெள்ளை : 02




# கற்பிட்டிப் பிரதேச சபையில் ஏற்பட போகும் மாற்றம்...!

(புகைப்பட உதவி - றிஸ்வி ஹுசைன்-FB) (எம்.எச்.எம்.எஸ்) (விரிவான செய்தி 04ம் பக்கத்தில்)



## கற்பிட்டி பிரதேச சபையின்

## சுழற்ச்சி முறையிலான மு.கா தேசிய பட்டியல் இம்முறையாவது கற்பிட்டி நகருக்கு கிடைக்குமா?

(எம்.எச்.எம்.எஸ்)

கற்பிட்டி பிரதேச சபையில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு கிடைக்க பெற்ற தேசிய பட்டியல் உறுப்பினர் பிரதிநிதித்துவத்தினை சூழற்ச்சி முறையில் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களுக்கு வழங்குவது எனவும் அதிலும் முதலில் கற்பிட்டி நகரின் வேட்பாளருக்கே அது வழங்கப்படும் என கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் அன்று கற்பிட்டியின் ஆதரவாளர்கள் மத்தியில் வாக்குறுதியளித்தார். எனினும் அந்த வாக்குறுதியை இரண்டு முறை கட்சியின் தலைவர் மீறி கற்பிட்டி நகருக்கு வெளியில் சூழற்ச்சி முறையில் இரண்டு முறை உறுப்பினர் நியமனம் வழங்கப்பட்டு விட்டதனை சுட்டிக்காட்டி கட்சியின் செயலாளருக்கு கற்பிட்டி ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிளை கடிதம் அனுப்பியுள்ளதுடன் தற்போது இரண்டாவது சூழற்ச்சி முறை உறுப்பினர் 2021.06.31 அன்று தனது பதவியினை இராஜினாமா செய்துள்ளதனையும் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளதுடன் மூன்றாவது சூழற்ச்சி முறை உறுப்பினர் கட்டாயமாக கற்பிட்டி நகருக்கே வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை உறுதிபட முன்வைத்துள்ளதாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கற்பிட்டிக் கிளையின் அமைப்பாளர் எம்.எச்.எம். ஹில்மி "கருப்புவெள்ளை" மின்னிதழ் பத்திரிகைக்கு தெரிவித்தார்.

## அனுதிக்கப்பட்ட அட்டை, சங்கு தொழிலுக்கான அனுமதிப்பத்திரம் வழங்குவதில் அமைச்சு இழுத்தடிப்பு.!

## கற்பிட்டி பிரதேச சபை எதிர்க் கட்சி தலைவர்

(எம்.எஸ்.எம்.எஸ்)



கடற்றொழில் அமைச்சினால் அங்கிகரிக்கப்பட்ட அட்டை, சங்கு ஆழ்கடல் தொழில் யுத்தம் முடிவுற்று சுமார் 16 வருடங்களாக முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் நாடு புராவும் உள்ள சூழியோடிகள் சுமார் ஆயிரம் நபர்கள் இத் தொழில் நிமித்தம் வருடா வருடம் இப்பகுதிகளுக்கு வருவதாகவும் அகில இலங்கை சூழியோடிகள் சங்கத்தின் ஊடாக இதற்கான அனுமதிப்பத்திரம் கடற்றொழில் அமைச்சின் ஊடாக கடந்த வருடங்கள் பெற்றுக் கொள்ளப் பட்டது. எனினும் இம்முறை ஆழ்கடலில் பகல் கடல் அட்டை,சங்கு தொழிலுக்கான அனுமதிப் பத்திரம் இதுவரை அமைச்சினால் வழங்கப்படாமல் இழுத்தடிப்பு செய்யப்படுவதாக கற்பிட்டி பிரதேச சபையின் எதிர்க்கட்சி தலைவரும் இத் தொழில் வழங்குனருமான ஏ.ஜே.எம் தாரீக் கருப்புவெள்ளை மின்னிதழுக்கு தெரிவித்தார்.

மேலும் தொடர்ந்து கருத்து தெரிவித்த

(தொடர்ச்சி.. 04ம் பக்கத்தில்)



# பசிலின் ஆட்டம் இன்று முதல் ஆரம்பம்

## நிதி அமைச்சர பதவி வழங்கப்படுமா..?

ஸ்ரீ லங்கா பொதுஜனபெரமுனவின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக முன்னால் அமைச்சர் பசில் ராஜபக்ஷ இன்று சத்தியப்பிரமானம் செய்து கொள்ளவுள்ளார்.


அக்கட்சியின் தேசியபட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த ஜயந்த கெற்றகொட தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்ததனை அடுத்து அந்த வெற்றிடத்திற்கே தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக பசில் ராஜபக்ஷ இன்று சத்தியப்பிரமானம் செய்து கொள்ளவுள்ளார்.

இந்நிலையில் இவருக்கு நிதி அமைச்சர் பதவி வழங்கப் படுமா? என்ற கேள்வியும் எதிர்பார்ப்பும் மக்கள் மத்தியில் காணப்படுகின்றமையும் குறிப்பிடதக்கது.


புனிதமிக்க ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு
R. Media வழங்கும்
தமிழ் கஸீதா போட்டி
தலைப்பு :
பாசமுள்ள தந்தை (Junior Group)
எழில் மிகு இலங்கை (Senior Group)
3000/- 2000/- 1000/-
கலந்து கொள்ள முடியுமானவர்கள்
வடமேல் மாகாண அரபுக் கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணவர்கள்
பிரிவுகள்
Junior Group (11-16 Age)
Senior Group (17-22 Age)
கலந்து கொள்பவர்கள் தமது பெயர், முகவரி, வயது, கற்கும் அரபுக் கல்லூரியின் பெயர் என்பவற்றை 2021.07.12 ஆம் திகதிக்கு முன்னர் கீழுள்ள WhatsApp இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்
Ash Sheikh Usman (Ilhari) : 077-978 3115 (Junior Group)
Ash Sheikh Safwan (Rahmani) : 077-959 6875 (Senior Group)
R MEDIA RAHMANIYYA MEDIA Kalpitiya, Sri Lanka.
Rahmaniyya Arabic College Kalpitiya, Puttalam.


**கற்பிட்டியில்** மணல்தோட்டம் பகுதியின் மக்கள் குடியிருப்புக்கு மத்தியில் கற்பிட்டிக்கு ஒளி கொடுத்த லைட்மோல் (Power House) என அழைக்கப்பட்ட இக்கட்டிடம் நீண்ட நாட்களாக செயலற்று காணப்பட்டதுடன் இதன் செயற்பாடுகள் அனைத்தும் நுரைச்சோலை கொய்யாவாடியில் அமைக்கப்பட்ட மின்சார சபையின் காரியாலயத்திற்கு மாற்றப்பட்டது. கற்பிட்டி பிரதேச சபையின் கட்டுப்பாட்டில் இருந்த இக்கட்டிடத்தில் பொது வாசிகசாலை அமைக்கும் முயற்ச்சி மேற்கொள்ளப்பட்டும் பின்னர் அதுவும் கைவிடப்பட்டது. அதன் பின்னர் கற்பிட்டி பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் தனது முகநூல் பக்கத்தில் இக்கட்டிடம் அகற்றப்பட்டு புதிய பிராந்திய காரியாலயம் அமைக்கப்பட உள்ளதாக குறிப்பிட்டிருந்தார். எனினும் தற்போது கிடைக்கப் பெற்றுள்ள தகவலின்படி இவ்விடத்தில் பெரிய மின்பிரப்பாக்கிகள் சில (Transformer) மாத்திரம் அமைக்கப்பட உள்ளதாக தெரிய வந்துள்ளது. இது விடயமாக ஆராய்ந்து பார்க்குமாறு இப்பகுதிவாழ் குடியிருப்பாளர்களை **" கருப்புவெள்ளை"** மின்னிதழ் வேண்டிக் கொள்கின்றது.

மேலும் இக்கட்டிடம் அகற்றப்படுவதற்கான கேள்விப்பத்திரம் கோரப்பட்டதா? எனவும் இதற்கான டெண்டரை பெற்றுக் கொண்டவர் யார்? எவ்வளவு தொகை? இதில் உடைக்கப்படும் கட்டிட இடிபாடுகள் கற்பிட்டி பிரதேச சபையின் பெகோ இயந்திரத்தினால் டிப்பர் வாகனத்தில் ஏற்றப்பட்டு மீண்டும் புகுக்குடியிருப்பில் நீண்ட நாட்களாக முற்றுப்பெறாமல் காணப்படும் பொது விளையாட்டு மைதானத்தில் கொட்டப்படும் காட்சிகளும் எமது **" கருப்புவெள்ளை"** மின்னிதழ் கெமராவுக்குள் பதிவு செய்யப்பட்டவை உங்கள் பார்வைக்கும் சிந்தனைக்கும்























# நீத்தார் பெருமை



## 01 இவ்வாரம்

**நினைவு கூறப்படக் கூடியவர்கள் எத்துறையினை சார்ந்தவராகவும் இருக்கலாம்**



**மர்ஹூம் அல்ஹாஜ் எஸ்.ஐ.எம்.ஏ ஜப்பார்**

கற்பிட்டியில் வாழ்ந்து மறைந்தும் மக்கள் மனங்களில் என்றும் நினைவில் நின்றுகொண்டிருக்கும் மாமனிதர்களின் நினைவலைகளை மீட்டிப் பார்க்கும் களம் இது. இதில் நினைவு கூறுவதற்கு பொறுத்தமானவர்கள் என நீங்கள் என்னும் கற்பிட்டியில் வாழ்ந்து மறைந்த மனிதர்கள் பற்றிய சிறு குறிப்பையும் அவரின் புகைப்படம் ஒன்றையும் உடன் எமது வட்சப் இலக்கமான **077 47 48 407** ற்கு உடன் அனுப்பிவைக்கவும்.

**இவ்வாரம்** கற்பிட்டியில் வாழ்ந்து கலைத்துறை மற்றும் அரசியல் ஆகிய இரண்டிலும் தடம்பதித்து மறைந்த மர்ஹூம் **அல்ஹாஜ் எஸ்.ஐ.எம்.ஏ. ஜப்பார்** பற்றிய நினைவலைகளை மீட்டிப் பார்க்கும் சந்தர்ப்பத்தினை **வாராந்த மின்னிதழ்**' பத்திரிகையான " **கருப்புவெள்ளை**" வாசகர்களுக்கு வழங்கியுள்ளது.

அதன் அடிப்படையில் **மர்ஹூம் அல்ஹாஜ் எஸ். ஐ. எம். ஏ. ஜப்பார்** பற்றிய புகைப்படங்கள், கவிதைகள், கட்டுரைகள், விவரணங்கள் என உங்களிடம் புரையோடிக் கிடக்கும் தகவல்களை எமது வட்சப் இலக்கமான 077 47 48 407 ற்கு உடன் அனுப்பிவையுங்கள்.

அவைகள் ஆவணங்களாக தொகுத்து வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் " **கருப்புவெள்ளை**" ' **மின்னிதழ்**' ஊடாக இடம்பெறும்.




## கற்பிட்டி ரஹ்மானிய்யா அரபுக் கல்லூரியின் மாணவர்களுக்கான வாராந்த வினா- விடை போட்டியின் ஜூன் மாத வெற்றியாளர்கள்

RAHMANIYA ARABIC COLLEGE KALPITIYA, SRI LANKA
REGD. NO .: MRCA/13/1/AC/42

R MEDIA RAHMANIYYA MEDIA Kalpitiya, Sri Lanka.

**முதலாம் வாரம்**




W.M பர்ஸான்
07 ம் வகுப்பு
பள்ளிவாசல்துறை

**இரண்டாம் வாரம்**



S.H மொஹமட்
01 ம் வகுப்பு
கற்பிட்டி.

**மூன்றாம் வாரம்**



M.R.M றிகாஸ்
06 ம் வகுப்பு
ஆலங்குடா.

**நான்காம் வாரம்**



M.R.M றிஸான்
07 ம் வகுப்பு
ஆலங்குடா.

## கற்பிட்டி பிரதேச சபையியில்.....

(முன்பக்க செய்தி...)

**கற்பிட்டி** பிரதேச சபையின் பரப்பளவு 223 சதுர கிலோமீற்றாக காணப்படுவதுடன் இதன் சனத்தொகை ஒரு இலட்சத்தையும் கடந்துள்ளது. கற்பிட்டி பிரதேச எல்லைக்குள் கற்பிட்டி,முந்தல் ஆகிய இரண்டு பிரதேச செயலகங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. கற்பிட்டி பிரதேச செயலகப் பிரிவிற்குள் 31 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் 11 தேர்தல் வட்டாரங்களையும் முந்தல் செயலக பிரிவிற்குள் 12 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் 06 தேர்தல் வட்டாரங்களுமாக 43 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் 17 தேர்தல் வட்டாரங்களும் காணப்படகின்றன.

கடந்த முறை நடைபெற்ற புதிய கலப்பு தேர்தல் முறை மூலம் கற்பிட்டி பிரதேச சபை 17 வட்டாரங்களாக பிரிக்கப்பட்டு 60 சதவீதம் வட்டார ரீதியான தேர்தல் மூலம் 19 உறுப்பினர்களும் 40 சதவீதம் விகிதாசார பிரதிநிதித்துவத்தின் ஊடாக 12 உறுப்பினர்களுமாக மொத்தம் 31 உறுப்பினர்கள் கற்பிட்டி பிரதேச சபையிக்கு தெரிவு செய்யபட்டமை நாம் அறிந்த விடயம்.

இதன்படி கற்பிட்டி பிரதேச சபையில் ஐக்கிய தேசிய கட்சி 11 ஆசனங்களையும், ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன 07 ஆசனங்களையும், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி 07 ஆசனங்களையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 04 ஆசனங்களையும், ஐக்கிய சமாதான கூட்டமைப்பு 01 ஆசனத்தினையும், மீன் சின்னத்தில் போட்டியிட்ட சுயேட்சைக் குழு 01 ஆசனத்தினையும் கைப்பற்றி இருந்தமையும் குறிப்பிடதக்கது.

இவ்வாறான நிலையில் கற்பிட்டி பிரதேச சபையில் ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர்களான யூ.எம்.எம் அக்மல், ஏ.சி. சுலாஹுதீன் ஆகிய இருவரும் வேறு கட்சிகளுடன் இணைந்து செயற்பட்டதனை அடுத்து இருவரையும் கற்பிட்டி பிரதேச சபையிலிருந்து இடைநிறுத்தி உள்ளதாக ஐ.தே.கட்சி அறிவித்துள்ளதுடன், அந்த வெற்றிடங்களுக்கு புதிதாக கற்பிட்டியைச் சேர்ந்த ஏ.கே. ஆப்தீன் (அலாவுதீன்), தழுவையைச் சேர்ந்த கிங்ஸ்லி பெர்ணாந்து ஆகியோரை நியமித்துள்ளது.

அத்தோடு முஸ்லிம் காங்கிரஸின் கற்பிட்டி பிரதேச சபையின் சூழற்ச்சி முறையிலான தேசிய பட்டியல் உறுப்பினர் ஜஸீம் ரஹ்மான் தனது பதவியை இராஜினாமா செய்ததனை அடுத்து அவ் உறுப்பினர் பதவியும் வெற்றிடமாக உள்ளது அதற்கான புதிய உறுப்பினர் இந்தச் செய்தி மின்னிதழுக்கு செல்லும் வரை நியமிக்கப்படவில்லை.

இவ்வாறு கற்பிட்டி பிரதேச சபையில் மூன்று உறுப்பினர்கள் புதிதாக மாற்றம் பெற்றுள்ள நிலையில் அதன் ஆட்சி அதிகாரங்களிலும் மாற்றங்கள் ஏற்படுமா.? என்ற கேள்வியுடனும் எதிர்பார்ப்புடனும் கற்பிட்டி பிரதேச மக்கள் உள்ளதனை அவதானிக்க கூடியதாக உள்ளமையும் குறிப்பிடதக்கதாகும்.

## அனுமதிக்கப்பட்ட அட்டை, சங்கு தொழிலுக்கான..

(முன்பக்கத் தொடர்...)

**கற்பிட்டி** எதிர்க்கட்சி தலைவர் இவ்வாறு பருவம் அறிந்து செய்யப்படும் இத்தொழிலுக்காக கற்பிட்டி பிரதேசத்திலிருந்தும் சுமார் 300 க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் பகுதிகளுக்கு வருடா வருடம் செல்வதாகவும் அதன் மூலம் கற்பிட்டியின் பொருளாதாரமும் முன்னேற்றம் ஏற்படுவதனையும் சுட்டிக்காட்டிய அவர்

மேலும் ஆழ்கடல் தொழிலான அட்டை, சங்கு தொழில் அரசினால் அங்கிகரிக்கப்பட்ட தொழில் எனவும் இதன் மூலம் நாட்டிற்கு அதிகளவான அந்நிய செலவாணியை நாட்டிற்கு ஈட்டித்தருவதாகவும், முன்பு ஒரு போதும் இல்லாத வண்ணம் இம்முறை மட்டும் பகல்கடல் அட்டை, சங்கு தொழிலுக்கான அனுமதிப்பத்திரம் இதுவரை வழங்கப்படாமல் கடற்றொழில் அமைச்சினால் இழுத்தடிப்பு செய்யப்படுவது எமது தொழிலை முடக்கும் செயல் எனவும் குறிப்பட்டார்.

மேலும் இவ்வாறான சூழ்நிலையில் அனுமதிப்பத்திரம் இன்றி பலரும் இத் தொழிலை மேற்கொள்வதாகவும் எனினும் அப் பகுதி கடற்படையினரால் அவர்கள் கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்படும் செயற்பாடுகளும் இடம் பெற்று வருவதனையும் அவர் சுட்டிக்காட்டினார்.

"கருப்புவெள்ளை" வாராந்த மின்னிதழ்
பத்திரிகையில் உங்கள்
விளம்பரங்களை பிரசுரிக்க
தொடர்புகளுக்கு
077 47 48 407






வாராந்த மின்னிதழ்
Black & white
# கருப்பு வெள்ளை
மறைக்கப்பட்ட உண்மைகளின் உரிமைக் குரல்..!

அன்பார்ந்த வாசகர்களுக்கு...

அஸ்ஸலாமு அலைக்கும்.... வணக்கம்....

கற்பிட்டி வரலாற்றில் செய்திப் பத்திரிகை ஒன்றை முதன் முதலில் மின்னிதழ் ஆக வெளியிட்டதற்கு பல்வேறு தரப்பினரினதும் ஆதரவுகள் மட்டுமின்றி “கருப்புவெள்ளை” யின் வாசகர்களாகிய நீங்களே புதியவர்களுக்கு FORWARD பண்ணி அறிமுகப்படுத் தப்பட்டதனைக் கண்டு அகம் மகிழ்ந்தவனாக முதற் கண் வல்ல இறைவனுக்கு நன்றி செலுத்துகின்றேன். “அல்ஹம்துலில்லாஹ்” இறைவன் துணையோடு எனது இரண்டாவது இதழையும் உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்...

மேலும் என் உறவுகள், நண்பர்கள், வாசகர்கள் என்போருக்கும் இன்னும் எனக்கு அறிவுரைகள், கருத்துக்கள், விமர்சனங்கள், ஆலோசனைகள், வாழ்த்துக்களை நேரடியாகவும் தொலைபேசி ஊடாகவும், வட்சப் மூலமும் பேஸ்புக் வாயிலாகவும் வழங்கி என்னை உட்சாகப்படுத்தி ஊக்கமளித்த அனைத்து நல்லிதயங்களுக்கும் எனது பணிவான நன்றிகளை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ் இதழில் இருந்து கற்பிட்டியின் வரலாற்றை சற்று திரும்பி பார்க்கும் நோக்கில் “நீத்தார் பெருமை” என்ற நினைவலைகளை மீட்டிப்பார்க்கும் புதியதோர் பகுதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வாசகர்களாகிய உங்களின் முழு ஆதரவையும் தருவீர்கள் என்ற நம்பிக்கையுடன். புதியதோர் மாற்றத்துடன் மூன்றாவது இதழில் இன்ஷா அல்லாஹ் மீண்டும் சந்திப்போம்...!

எம்.எச்.எம் சியாஜ்
பிரதம ஆசிரியர்.

**பெயர் மாற்றம் தொடர்பான**

விளம்பரங்களை தேசிய பத்திரிகையில் குறைந்த கட்டணத்தில் பிரசுரித்துக் கொள்ள உடன் தொடர்பு கொள்ளவும்

(தேசிய அடையாள அட்டையின் பிரதி, பிறப்பு சான்றிதழ் பிரதி, கிராம அலுவலர் வதிவிட அத்தாட்சி, பள்ளிக் கடிதம் ஆகியவற்றுடன்)

078 340 20 29-077 47 48 407

## 2021 வருடத்திற்கான வாக்காளர் இடாப்பு பதிவு

2021 ம் வருடத்திற்கான வாக்காளர் இடாப்பு பதிவு செய்யும் நடவடிக்கை தற்போது நடைபெற்று வருகின்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று காரணமாக இம் முறை கிராம உத்தியோகத்தரினால் வீடுகளுக்கு சென்று புதிய வாக்காளர் இடாப்பு பதிவுகள் மேற்கொள்ளப்படமாட்டாது என கிராம உத்தியோகத்தர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே புதிதாக 18 வயதை பூர்த்தி செய்தவர்கள் மற்றும் புதிதாக திருமணமாகி புதிய கிராம உத்தியோகத்தர் பகுதிக்குள் வசிப்பவர்கள் உடனடியாக கிராம உத்தியோகத்தரை அவரது அலுவலக தினங்களில் காரியாலயத்திற்கு சென்று வாக்காளர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

## ஹைக்கூ கவிதைகள்..

பகுதிக்கு உங்களின் 5 வரிக் கவிதைகளை உங்களின் புகைப்படத்துடன் எமது வட்சப் இலக்கத்திற்கு அனுப்புங்கள்...

077 47 48 407

உங்கள் ஆலோசனைகள், கருத்துக்கள், விமர்சனங்கள், படைப்புக்கள், ஆக்கங்கள், எழுத்துக்கள், உங்கள் கிராம செய்திகள் எதுவானாலும் தரமானவைகளுக்கு களம் அமைத்து தர நாம் தயார் ஆக்கம் எழுத்துருவிலோ.. அல்லது குரல் பதிவாகவோ.. இருக்கலாம் உடன் எமது வட்சப் இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்.

077 47 48 407

இவ் கருப்புவெள்ளை மின்னிதழ் கற்பிட்டியைச் சேர்ந்த எம்.எச்.எம்.சியாஜ் என்பவரால் 2021.07.08 ல் வெளியீடப்பட்டது.